தினமணி

Dina mani 25/6/14

சென்னை ★ புதன்கிழமை, 25 ஜூன், 2014

# ‘கிடைக்கும் வேலையில் சேர்ந்து முன்னேற முயற்சி செய்யுங்கள்’

தாம்பரம், ஜூன் 24: தகுதிக்கேற்ற வேலைக்காகக் காத்திராமல் கிடைத்த வேலையில் சேர்ந்து தகுதியை உயர்த்திக் கொண்டு முன்னேற முயற்சி செய்யுங்கள் என்று மாருதி பவர் கண்ட்ரோல் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி எஸ்.செல்வகுமார் கூறினார்.

ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்கள் சொந்தமாக தொழில் தொடங்குவது குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து மேலும் அவர் பேசியது:

நாட்டில் பள்ளி இறுதி வகுப்பை முடித்துவிட்டு உயர் கல்வி பயில வாய்ப்பில்லாதவர்களின் எண்ணிக்கைக்கு இணையாக, தற்போது பொறியியல் கல்வி பயின்று தகுதியான வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது கவலைக்குரியது. ஆண்டுதோறும் பொறியியல் கல்வி பயின்று வெளிவரும் 2 லட்சம் மாணவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர்கள் மட்டுமே வேலை பெறும் தகுதியுடன் திகழ்கின்றனர். இந்த நிலையில், மாணவர்கள் வேலையில்லாமல் சுற்றித் திரிவதை விட கிடைத்த வேலையில் சேருங்கள். முடிந்த வரை நீங்கள் பயின்ற படிப்பு சார்ந்த வேலையில் சம்பளம் உள்ளிட்ட எதையும் பொருட்படுத்தாமல் சேர்ந்து வேலை செய்யத் தொடங்குங்கள். அங்கு சம்பளத்துடன் நீங்கள் சம்பாதிக்கும் வாடிக்கையாளர்கள் அறிமுகம், வேலை மூலம் பெறும் அனுபவம் உள்ளிட்டவற்றை வளர்த்துக் கொள்ளுங்கள்.

சொந்தமாகத் தொழில் தொடங்க முதலீடு தேவையில்லை. ஆனால் பயிற்சி, அனுபவம் அவசியம்.

வேலையில் சேர்ந்து அதன் மூலம் நீங்கள் பெறும் துணிவு, ஊக்கம், தன்னம்பிக்கை உள்ளிட்ட அனைத்தும் சொந்தமாகத் தொழில் தொடங்கும் போது உறுதுணையாக வழிகாட்டி உதவும் என்றார்.

வணிக மேலாண்மைத்துறை இயக்குநர் மாறன், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைத் தலைவர் குமரப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை சார்ந்த தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கில் மாணவர்களுடன் உரையாடுகிறார் மாருதி பவர் கண்ட்ரோல் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி எஸ்.செல்வகுமார். உடன், மின்னணு துறைத் தலைவர் குமரப்பன், வணிக மேலாண்மைத் துறை இயக்குநர் மாறன்.